செய்தி வெளியீடு எண் :1676 நாள் : 17.08.2023

**ஒன்றிய முன்னாள் அமைச்சர் திரு. முரசொலிமாறன் அவர்களின் 90–வது பிறந்த நாளையொட்டி**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு.**

நாளெல்லாம் நம்மை இயக்கிடும் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞரின் மனச்சாட்சியென வாழ்ந்திட்ட முரசொலி மாறன் அவர்களது 90–ஆவது பிறந்தநாள் இன்று!

மதுரை சிலைமானில் தலைவர் கலைஞர் அவர்களால் 1952–இல் திறந்து வைக்கப்பட்ட கழக அலுவலகத்தில், மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.

கொள்கைக் கருவூலமான முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி நூல் அனைவரும் படித்திட வேண்டிய ஒன்று!

முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! அவரது கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in